www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்..... 3

# இருக்கும்போது பாடப்பட்ட வசை! இறந்தபின் தெரிவிக்கப்பட்ட வருத்தம்!!

(சென்றவாரத் தொடர்ச்சி)

நான்கு இளைஞர்களும் "வணக்கம் ஐயா" என்றதும், பதில் வணக்கம் சொன்னார் மேயர் அல்பிரட் துரையப்பா.

அதுவே அவரது இறுதி வணக்கமும் ஆனது.

துரையப்பா என்ன நடக்கப் போகிறது என்று நிதானிப்பதற்கிடையிலேயே இளைஞர்களில் ஒருவர் கைத் துப்பாக்கியால் சுட்டார்.

மார்பில் ரவைகள் பாய இரத்த வெள்ளத்தில் விழுந்தார் யாழ் மேயர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் தொண்டைக் குழாய்களால் பிரசார மேடைகளில் தினமும் சுடப்பட்டுக்கொண்டிருந்த துரையப்பாவின் கதையை இறுதியாக கைத் துப்பாக்கி முடித்துவைத்தது.

1975ம் ஆண்டு ஜுலை 27ம் திகதி துரையப்பா உயிர் இழந்த செய்தி காட்டுத் தீயாக நாடெங்கும் பரவியது.

அப்போது பிரதமராக இருந்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

செய்தி கேட்டு அவர் துடித்துப் போனார்.

உடனடியாக கொலையாளிகளை கண்டுபிடிக்குமாறு அரசு உத்தரவிட்டது.

அப்போது யாழ்ப்பாணத்தில் பொலிஸ் துறையில் தமிழ் அதிகாரிகள் தான் துப்புத் துலக்குவதில் பிரபலமானவர்களாக இருந்தனர்.

இன்ஸ்பெக்டர்கள் பஸ்தியாம் பிள்ளை, பத்மநாதன், தாமோதரம் பிள்ளை ஆகியோர் முக்கியமானவர்கள்.

பொலிசாரின் சந்தேகப் பார்வையில் முதலில் விழுந்தவர்கள் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள்தான்.

இறுதிச் சடங்கின் முன்னர் கொலையாளிகளை வளைத்துப் பிடித்துவிட வேண்டும் என்று பொலிஸ் தீவிரமாகியது.

'கொலையாளிகள் யார்?' யாழ்ப்பாணம் எங்கும் வலைவீசி தேடல் நடந்தது.

அந்த நான்கு இளைஞர்கள் யார் என்று நாடே அறியாத இரகசியத்தை அறிந்தவர்கள் இருந்தார்கள்.

அவர்கள்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டத் தலைவர்கள்.

அவர்களே இலக்கை அடையாளம் காட்டினார்கள்.

அவர்கள்தான் அந்த இலக்கை அழித்தவர்களையும் அறிந்து வைத்திருந்தார்கள்.

குறிப்பாக, தலைவர் அமிர்தலிங்கம் அந்த நான்கு இளைஞர்களதும் வரலாற்றை ஆதியோடு அந்தம் வரை அறிந்தவர்.

நான்கு இளைஞர்களில் ஒருவரான பிரபாகரனை 'தம்பி' என்று வாஞ்சையோடு அழைத்துப் பேசுவார் அமிர்.

அப்போது பிரபாகரனுக்கு 'தம்பி', 'கரிகாலன்' போன்ற பெயர்கள் வழங்கி வந்தன.

'துரோகி துரையப்பா' என்று எதுகை மோனையோடு, சந்த நயத்தோடு தமிழர் விடுதலைக் கூட்டணியால் துரையப்பா வசை பாடப்பட்டபோதும், யாழ்ப்பாணத்தில் அவருக்கென்றும் கணிசமான செல்வாக்கு இருந்தது.

கூட்டணி எதிர்ப்பாளர்கள், மற்றும் அவரால் வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர், யுவதிகள், சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களில் கணிசமானோர் துரையப்பாவை ஆதரித்தவர்களில் அடங்கியிருந்தனர்.

சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களிடம் அப்போதெல்லாம் கம்யுனிஸ்ட் கட்சியினர் தமிழ் ஈழக் கோரிக்கை குறித்து அச்சத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

இடது, வலது என்று பிரிந்திருந்த போதும் சகல கம்யுனிஸ்ட் கட்சிகளுமே தமிழ் ஈழக் கோரிக்கையை எதிர்த்துக் கொண்டிருந்தன.

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை?" என்று காசி ஆனந்தன் கவிதை எழுதியிருந்தார் அல்லவா?

**ஆண்ட பரம்பரை என்பது உயர் சாதியினரைத்தான் குறிக்கும். அவர்கள் மீண்டும் ஆள வந்தால் நீங்கள் சிரட்டையில்தான் தேநீர் குடிக்க வேண்டும்.**

**கை கட்டி வாய்பொத்தி நிற்கவேண்டியிருக்கும்** என்றெல்லாம் 'கம்யுனிஸ்டுக்கள்' என்று தம்மை அழைத்துக் கொண்டவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

காங்கேசன்துறைத் தொகுதி எம்.பி பதவியை துறந்து, தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்து அமரர் தந்தை செல்வநாயகம் (தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்) போட்டியிட்டபோது ஒரு தமிழர் அவரை எதிர்த்துப் போட்டியிட்டார்.

அவர்தான் சமீபத்தில் கனடாவில் காலமான 'கம்யுனிஸ்ட் 'வி. பொன்னம்பலம்.

தந்தை செல்வநாயகத்தை 'செவிடன்' என்றெல்லாம் திட்டித் தீர்த்தார்கள் கம்யுனிஸ்ட் கட்சியினர்.

அப்போது வெளிவந்துகொண்டிருந்த 'தினபதி' பத்திரிகை கூட்டணியினரை கேலி செய்தும், கிண்டல் செய்தும் எழுதியது.

அதனால் தமிழர்களுக்கு எதிரான பத்திரிகை என்று யாழ்ப்பாணத்தில் 'தினபதி' கருதப்பட்டது.

அனைத்தையும் மீறி தந்தை செல்வா காங்கேசன்துறை இடைத் தேர்தலில் மாபெரும் வெற்றியீட்டினார்.

எனினும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களிடம் கம்யுனிஸ்ட் கட்சிகள் தீவிரமாகப் பணியாற்றியதால் அவர்களிடம் தமிழ் ஈழக் கோரிக்கை குறித்து அச்சம் நிலவியது.

சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து பலருக்கு துரையப்பா சுட்டுறவுச் சங்கங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

துரையப்பாவின் இறுதிச் சடங்கில் ஆயிரக் கணக்காண மக்கள் கலந்துகொண்டனர். பலர் கண்ணீர்விட்டு கதறினார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் துரையப்பா மறைவுக்கு ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

### சுருதி மாறிய குரல்

**1972**

"எங்களக் கேட்டோ சிவகுமாரன் குண்டெறிஞ்சவர்? வழக்காட முடியாது போ."

**1974**

"தம்பி சிவகுமாரன் எங்களுக்கு வழி காட்டிவிட்டார்."

### கூட்டணி கண்டனம்

'கொலைக்கு காரணமானவர்களை தாம் வன்மையாக கண்டிப்பதாக' தெரிவித்து அகிம்சை வழியே தம் வழி என்று சொல்லிக்கொண்டனர்.

கூட்டணிமீதும், தலைவர் தளபதி அமுதர் மீதும் இருந்த தீவிர நம்பிக்கையால் கூட்டணியினரது அறிக்கையை 'சாணக்கிய தந்திரம்' என்று இளைஞர்கள் நினைத்தனர்.

விசாரணைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிசாரால் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இருவர் மட்டுமே கொலையில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள்.

ஒருவர் கலாபதி. மற்றவர் கிருபாகரன்.

பிரபாகரனும், பற்குணராஜாவும் கைது செய்யப்படவில்லை.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள்மீது கொழும்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் சட்டத்தரணிகளாக இருந்த தலைவர்களில் அநேகமாக எல்லோருமே சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரானார்கள்.

### அற்புதன்



அல்பிரட் துரையப்பா

### வழக்கில் தலைவர்கள்

அவர்களில் முக்கியமனவர்கள் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலமும், அமரர் திருச்செல்வமும்.

குற்றவாளிக் கூண்டில் நின்ற இளைஞர்கள் சிலர் தமது சட்டையில் உதய சூரியன் 'பட்ஜ்' அணிந்திருந்தனர். அது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னம்.

தமிழ்ஈழ சுதந்திரக் கொடியாகவும் உதயசூரியன் கொடியை கூட்டணி அறிவித்தது.

பெப்ரவரி 4ம் திகதி சிங்கக் கொடிகளை ஏற்றுங்கள் என்று அரசு அறிவிக்கும்.

'அன்று இல்லங்கள் தோறும் உதய சூரியன் கொடியை ஏற்றி சுதந்திர தாகத்தை வெளிப்படுத்துங்கள்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி ஆணையிடும்.

அது சுதந்திரக் கொடியாக நீடித்ததோ இல்லையோ தேர்தல்களில் கூட்டணியின் சின்னமாக இன்றுவரை இருக்கிறது.

வாக்காளர்கள் சுலபமாக கூட்டணியின் சின்னத்தை இனம் காணவும் கொடி ஏற்றங்களும், 'பட்ஜ்' அணிதல்களும் மிக வசதியாகப் போய்விட்டன.

தேர்தல் சின்னத்தையே தேசியக் கொடி என்று அறிவித்து பிரபலப்படுத்திய கூட்டணித் தலைவர்களது விவேகத்தை இப்போதுகூட மெச்சத் தோன்றுகிறது.

அது மட்டுமல்ல, துரையப்பா கொலை வழக்கையே பாரிய பிரசாரமாகவே மாற்றியமைத்துவிட்டனர் கூட்டணியினர்.

மறுபுறம், 'எங்களைக் காக்க கூட்டணியினர் இருக்கிறார்கள். சட்டம் எதுவும் செய்ய இயலாது' என்ற நம்பிக்கையும் தீவிரவாத இளைஞர்களிடம் ஏற்பட்டது.

"நீங்கள் செய்யுங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்ற மறைமுகச் செய்தியும் துரையப்பா கொலை வழக்கில் அணி அணியாக ஆஜரான சட்டத்தரணிகள் மூலம் தெரிவிக்கப்பட்டது எனலாம்.

**தமிழ் ஈழம் ஒரு தனிநாடு. இறைமையுள்ள நாடு. சிறிலங்கா சட்டங்கள் அதனைக் கட்டுப்படுத்த முடியாது** என்று ஆதாரங்களை அள்ளிவைத்து வாதாடியவர் அமரர் திருச்செல்வம்.

### செல்வரும்-லிங்கமும்

திருசெல்வம் பற்றிய ஒரு சுவையான குறிப்பு-

1972ம் ஆண்டு யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு பிரதியமைச்சர் சோமவீர சந்திரசிறி விஜயம் செய்தார்.

அவரது காருக்கு குண்டு வீசப்பட்டது. வீசியது சிவகுமாரன்.

அதனைத் தொடர்ந்து சிவகுமாரன் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மல்லாகம் மாஜிஸ்ரேட் நீதிமன்றில் சிவகுமாரன் சார்பில் ஆஜரானவர் அமரர் சுந்தரலிங்கம்.

'அடங்காத் தமிழர்' என்று அழைக்கப்பட்ட சுந்தரலிங்கம், **"பணம் தராவிட்டால் வழக்காட மாட்டேன்"** என்று சிவகுமாரின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரையிடம் அடம் பிடித்தார்.

தருவதாகச் சொன்னார் சிவகுமாரின் அம்மா. ஆனால் கொடுக்க வசதியில்லை.

சுந்தரலிங்கத்தின் கார்சாரதி தினமும் சிவகுமாரின் வீட்டு வாசலில் காவல் நின்று நச்சரிப்பார்.

"ஐயா வாங்கி வரச் சொன்னார்" என்பார் சாரதி. மல்லாகம் நீதிமன்றம் தனக்கு சிவகுமாரன் விடயத்தில் பிணை வழங்கும் அதிகாரம் இல்லை என்றுவிட்டது.

உடனே தலைவர் அமிரை சிவகுமாரன் வீட்டார் சந்தித்தனர்.

அவர் கொழும்பில் இருந்த திருச்செல்வத்திற்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். மேல் நீதிமன்றத்தில் மனுப்போட்டு பிணை வாங்கிக் கொடுக்குமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடிதத்தோடு வந்த இளைஞர் கொழும்பில் திருச்செல்வத்தை சந்தித்தார்.

கடிதத்தை படித்துவிட்டு திருச்செல்வம் அந்த இளைஞரைப் பார்த்துக் கேட்டார்,

"எங்களைக் கேட்டோ செய்தனீங்கள்?"

பிணை கேட்க மறுத்துவிட்டார் திருச்செல்வம்.

### எப்படி?

**துரையப்பா கொலையில் பிரபாகரன் பங்கு கொண்டிருந்தார். ஆனால் துரையப்பா கொலைக்கு காரணம் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்ல! எப்படி? வரும் வாரம்வரை பொறுத்திருங்கள்.**

### செத்தபின் வாழ்த்து

பின்னர் பல மாதங்கள் சென்று சிவகுமாரன் விடுதலையானார்.

1974 ஜுலை 5ம் திகதி சிவகுமாரனுக்கு கொழும்பில் ஒரு அஞ்சலிக் கூட்டம்.

இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடந்த அந்த அஞ்சலிக் கூட்டத்தை தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

பிரதான பேச்சாளர் திருச்செல்வம். அவர் தனது உரையில் கரகோஷத்தின் மத்தியில் கூறினார்,

"தம்பி சிவகுமாரன் எங்களுக்கு வழிகாட்டி விட்டார்."

முன்னர் கடிதத்தோடு திருச்செல்வத்தை சந்தித்த இளைஞரும் அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்தார் என்பதுதான் இன்னும் சுவாரசியம்.

(தொடர்ந்து வரும்)

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

பேற்றுள்ளார். அதற்காக தாக்குதலை ஒத்திவைக்குமாறு தலைவர் உத்தரவிட்டுள்ளார்" ஆனால் அரசுக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

இதன் பின்னர் கடற்படையினரின் தாக்குதல் ஒன்றில் மீனவர்கள் காயமடைந்தனர். 17ம் திகதி தனியார் பேருந்து ஒன்றின் மீது யாழ்ப்பாணத்தில் ஹெலி தாக்கி சாரதி காயமடைந்தார்.

உடனே புலிகளின் குரல் அறிவித்தது: "புலிகளது போர் நிறுத்தத்தை படையினர் மீறி விட்டனர். படைகளை கட்டுப்படுத்த புதிய ஜனாதிபதியாலும் முடியவில்லை."

இது அரசாங்கமே பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதை.

போர் நிறுத்தச் செய்தியை படைத் தரப்பு ஒட்டுக் கேட்டது உண்மையானால், அவர்களே அதை உலகறியச் சொல்லி விட்டு பிறகெதற்கு தாக்குதல் நடத்தினார்கள் என்று தெரியவில்லை.

தம்மீது தாங்களே படையினர் நம்பிக்கையீனங்களை உருவாக்கி வருகின்றனர்.

கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு நடந்தது. போர்நிறுத்தம் பற்றி நிருபர்கள் கேட்டனர். "எமக்கு அதிகாரபூர்வமாக புலிகள் அறிவிக்கவில்லை. எனவே நாம் போர் நிறுத்தம் செய்யவில்லை" என்றது அரச தரப்பு.

இதென்ன புதுக் குழப்பம்? இதைவிட ஒட்டுச் செய்தியை கேட்டுவிட்டு "அப்படியா சங்கதி? பார்க்கலாம்?" என்று இருந்திருக்கலாமே. அதை ஏன் வெளியே விடவேண்டும்? பிறகேன் கைவிரிக்க வேண்டும்?

ஆக, அரச தரப்புக்கு புலிகளோடு பேசியாக வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கிறது.

முதல் சுற்றுப் பேச்சு முடிந்தவுடன் காமினி கொலை இடையே வந்து குறுக்கிட்டு விட்டதால் மீண்டும் எங்கிருந்து தொடங்கலாம் என்று அரசு ஒரு முடிவுக்கு வராமல் தடுமாறுகிறது.

அதன் வெளிப்பாடுதான் ஒட்டுச் செய்திகள். இந்தா அந்தா போர் நிறுத்தம் வருவது போன்ற செய்திகளும் வெளியே வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், ஒரு விசயம் உறுதி. அரசு மீண்டும் புலிகளோடு பேச்சை ஆரம்பிக்க உறுதியாக விரும்புகிறது.

ஆக, 'புலி வருகுது' கதை போல, இறுதியாக போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசு வந்தேயாக வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இல்லாவிட்டால் புலிகளிடமிருந்து பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை அரசாங்கம் சந்திக்க வேண்டியும் வரலாம்.

அப்படி நடந்தபின் உடனடிப் போர் நிறுத்தம் செய்ய முடியாமல் போய்விடும். ஏனெனில் அரசு தன்னைப் பலவீனமாகக் காட்ட விரும்பாது.

புலிகளும் தமது பலத்தை இழக்க விரும்பமாட்டார்கள்.

புலிகளது பலத்தை தக்கவைத்துக் கொள்ளும் வகையிலான தீர்வை அரசும் விரும்பாது.

இந்த நிலையில் பேச்சை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இரு தரப்புக்கும் உண்டு.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு பேச்சை நடத்துவது தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதோடு சம்பந்தப்பட்டது.

தமிழ் மக்கள் ஜனாதிபதி சந்திரிக்கா மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு தாம் எதிராக செல்வது விவேகமல்ல என்ற ரீதியில் புலிகளும் பேச்சை மறுக்கமுடியாது.

இரு தரப்பும் உளப்பூர்வமாக அடிப்படை நம்பிக்கைகளோடு பேச்சை நடத்தினால் அமைதி திரும்பும்- நீடிக்கும்.

அதற்கு தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்து அரசின் நிலைப்பாடும் முக்கியமானது.

ஈழக் கோரிக்கையை கைவிட பிரபாகரன் உளப்பூர்வமாக முன்வரும் விடயமும் முக்கியமானது.

இரண்டும் இல்லாவிட்டால் இரு தரப்பும் ஒருவரை ஒருவர் அம்பலப்படுத்த முயலும் முயற்சியாக பேச்சுக்கள் முடிவடையலாம். அமைதி கனவாகிவிடும்.

அதைவிடுத்து அரசு வடக்குக்கு சீமெந்து அனுப்புவதை வைத்தோ அல்லது பிரபா எழுதும் கடிதத்தில் திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா மீது நம்பிக்கை இருப்பதாக ஒரு வரி இருப்பதை வைத்தோ எதிர்பார்ப்புக்களை வளர்க்க முடியாது.

ஏனெனில் இவை போன்ற காட்சிகள் முன்னரும் தோன்றி மறைந்தவைதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்